**செய்தி வெளியீடு எண்: 14** **நாள்:08.05.2021**

**ஆவின் பால் விலை குறைப்பு – செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின் 5 முக்கிய அரசாணைகள் பிறப்பித்துள்ளார்கள், அதில் இரண்டாதவதாக பொது மக்கள் நலன் கருதி, ஆவின் பால் விலையை லிட்டர் ஒன்றுக்கு மூன்று ரூபாய் வீதம் 16.05.2021 முதல் குறைத்து விற்பனை செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாணை பிறப்பித்துள்ளார்கள்.

**சில்லறை விற்பனை:–**

இந்த அரசாணைக்கு ஏற்ப பொதுமக்கள் ஆவின் பார்லர்கள் மற்றும் சில்லறை விற்பனை கடைகளில் நேரடியாக 16.05.2021 முதல் ஆவின் பால் லிட்டர் ஒன்றுக்கு மூன்று ரூபாய் குறைத்து பெற்றுக்கொள்ளலாம்.

கீழ்கண்ட விலை பட்டியல் 16.05.2021 முதல் அமலுக்கு வருகின்றது.

| வ எண் | பால் வகைகள் | தற்போதைய விலைப்பட்டியல் (ரூ) | புதிய விலைப்பட்டியல் (ரூ) |
|---|---|---|---|
| 1. | சமன்படுத்தப்பட்ட பால் 1000 ML (TM) | 43 | 40 |
| 2. | சமன்படுத்தப்பட்ட பால் 500 ML (TM) | 21. 50 | 20 |
| 3. | நிலைப்படுத்தப்பட்ட பால் 500ML (SM) | 23. 50 | 22 |
| 4. | நிறை கொழுப்பு பால் 500ML (FCM) | 25. 50 | 24 |
| 5. | இருமுறை சமன்படுத்தப்பட்ட பால் 500 ML (DTM) | 20 | 18.50 |
| 6. | டீமேட் (Teamate) 1000 ML | 60 | 57 |

**பால் அட்டை விற்பனை:–**

சென்னையில் பிரதி மாதம் 1 ஆம் தேதி முதல் 15 ஆம் தேதி வரை பால் அட்டை 27 வட்டார அலுவலகங்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதற்கு உண்டான பால் அட்டைதாரருக்கு 16 ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 15ஆம் தேதி வரை வழங்கப்படும்

**16.05.2021 முதல் கீழ்கண்ட பால் அட்டை விலை குறைப்பு பட்டியல் அமலுக்கு வருகிறது.**

| வ எண் | பால் வகைகள் | தற்போதைய விலைப்பட்டியல் (ரூ) | புதிய விலைப்பட்டியல் (ரூ) |
|---|---|---|---|
| 1. | சமன்படுத்தப்பட்ட பால் 1000 ML (TM) | 40 | 37 |
| 2. | சமன்படுத்தப்பட்ட பால் 500 ML(TM) | 20 | 18. 50 |
| 3. | நிலைப்படுத்தப்பட்ட பால் 500ML (SM) | 22. 50 | 21 |
| 4. | நிறை கொழுப்பு பால் 500ML (FCM) | 24. 50 | 23 |
| 5. | இருமுறை சமன்படுத்தப்பட்ட பால் 500 ML (DTM) | 19. 50 | 18 |

எனவே நுகர்வோர்களுக்கு இதுவரை விற்பனை செய்யப்பட்டுள்ள பால் அட்டைகளுக்கு உண்டான வித்தியாச தொகை அடுத்த மாதம் பால் அட்டை விற்பனை செய்யும் போது ஈடு செய்யப்படும்.

பொது மக்களுக்கு பால் விநியோகம் தங்கு தடையின்றி நடைபெறுவதை கண்காணிக்க 24 மணி நேர வாடிக்கையாளர் சேவை மையம் ஆவின் தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆவின் பால் விநியோகம் பற்றிய தகவல்களுக்கு சென்னையை பொறுத்தவரை பொது மக்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்: 1800 425 3300, 044–23464575, 23464576, 23464578 மேலும் பிற மாவட்டங்களில் அந்தந்த மாவட்டபால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய பொது மேலாளர்களை தொடர்பு கொள்ளும்படி ஆவின் நிர்வாகம் தெரிவித்துக்கொள்கிறது.

**நிர்வாக இயக்குநர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**